ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ நீராய் நிலனாய் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நீராய் நிலனாய் ॥

கேட்டோர் நெஞ்சம் நீராய் உருகும் வண்ணம் ஆழ்வார்
எம்பெருமானைக் கூப்பிடுதல்

‡நீராய் நிலனாய்⋆ தீயாய்க் காலாய் நெடுவானாய்⋆
சீரார் சுடர்கள் இரண்டாய்ச்⋆ சிவனாய் அயன் ஆனாய்⋆
கூரார் ஆழி வெண் சங்கேந்திக்⋆ கொடியேன்பால்
வாராய்⋆ ஒருநாள்⋆ மண்ணும் விண்ணும் மகிழவே (1)

மண்ணும் விண்ணும் மகிழக்⋆ குறளாய் வலங்காட்டி⋆
மண்ணும் விண்ணும் கொண்ட⋆ மாய அம்மானே⋆
நண்ணி உனை நான்⋆ கண்டுகந்து கூத்தாட⋆
நண்ணி ஒருநாள்⋆ ஞாலத்தூடே நடவாயே (2)

ஞாலத்தூடே நடந்தும் நின்றும்⋆ கிடந்திருந்தும்⋆
சாலப் பல நாள்⋆ உகந்தோறுயிர்கள் காப்பானே⋆
கோலத் திருமா மகளோடு⋆ உன்னைக் கூடாதே⋆
சாலப் பல நாள்⋆ அடியேன் இன்னும் தளர்வேனோ (3)

தளர்ந்தும் முறிந்தும்⋆ சகட அசுரர் உடல் வேறா⋆
பிளந்து வீயத்⋆ திருக் கால் ஆண்ட பெருமானே⋆
கிளர்ந்து பிரமன் சிவன்⋆ இந்திரன் விண்ணவர் சூழ⋆
விளங்க ஒருநாள்⋆ காண வாராய் விண்மீதே (4)

விண்மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்!⋆ கடல் சேர்ப்பாய்⋆
மண்மீதுழல்வாய்!⋆ இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்⋆
எண் மீதியன்ற புறவண்டத்தாய்!⋆ எனதாவி⋆
உள் மீதாடி⋆ உருக்காட்டாதே ஒளிப்பாயோ (5)

பாயோர் அடிவைத்து⋆ அதன் கீழ்ப் பரவை நிலம் எல்லாம்
தாய்⋆ ஓர் அடியால்⋆ எல்லா உலகும் தடவந்த

www.prapatti.com

மாயோன்⋆ உன்னைக் காண்பான்⋆ வருந்தி எனை நாளும்⋆
    தீயோடு உடன்சேர் மெழுகாய்⋆ உலகில் திரிவேனோ (6)

உலகில் திரியும் கரும கதியாய்⋆ உலகமாய்⋆
    உலகுக்கே ஓர் உயிரும் ஆனாய்⋆ புறவண்டத்து⋆
அலகில் பொலிந்த⋆ திசை பத்தாய அருவேயோ⋆
    அலகில் பொலிந்த⋆ அறிவிலேனுக்கருளாயே (7)

அறிவிலேனுக்கருளாய்⋆ அறிவார் உயிர் ஆனாய்⋆
    வெறி கொள் சோதி மூர்த்தி!⋆ அடியேன் நெடுமாலே⋆
கிறிசெய்தென்னைப் புறத்திட்டு⋆ இன்னம் கெடுப்பாயோ⋆
    பிறிதொன்றறியா அடியேன்⋆ ஆவி திகைக்கவே (8)

ஆவி திகைக்க⋆ ஐவர் குமைக்கும் சிற்றின்பம்⋆
    பாவியேனைப்⋆ பல நீ காட்டிப் படுப்பாயோ⋆
தாவி வையம் கொண்ட⋆ தடம் தாமரைகட்கே⋆
    கூவிக் கொள்ளும் காலம்⋆ இன்னம் குறுகாதோ (9)

குறுகா நீளா⋆ இறுதி கூடா எனையூழி⋆
    சிறுகா பெருகா⋆ அளவில் இன்பம் சேர்ந்தாலும்⋆
மறு கால் இன்றி மாயோன்⋆ உனக்கே ஆளாகும்⋆
    சிறு காலத்தை உறுமோ⋆ அந்தோ தெரியிலே (10)

‡தெரிதல் நினைதல்⋆ எண்ணல் ஆகாத் திருமாலுக்கு⋆
    உரிய தொண்டர் தொண்டர்⋆ தொண்டன் சடகோபன்⋆
தெரியச் சொன்ன⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
    உரிய தொண்டர் ஆக்கும்⋆ உலகம் உண்டாற்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com